01.06.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### கோவை உள்ளிட்ட 4 மாவட்டங்களில் தென்மேற்குப் பருவ மழை குறையும்: வேளாண்மை காலநிலை ஆராய்ச்சி மையம் தகவல்

தமிழகத்தில் எதிர்வரும் தென்மேற்கு பருவ மழைக் காலத்தில் கோவை, நாகப்பட்டினம், ராமநாதபுரம், திருவாரூர் மாவட்டங்களில் சராசரி மழை அளவைக் காட்டிலும் குறைவான மழையே இருக்கும் என்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து பல்கலைக்கழகத்தின் பயிர் மேலாண்மைத் துறை இயக்குநர் சி.ஜெயந்தி, வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையத்தின் தலைவர் எஸ்.பன்னீர்செல்வம் ஆகியோர் கோவையில் செய்தியாளர்களிடம் செவ்வாய்க்கிழமை மேலும் கூறியது:

தென்மேற்குப் பருவ மழைக் காலத்துக்கான (ஜூன் - செப்டம்பர்) மழை குறித்து விவசாயிகளுக்கு முன்னறிவிப்பு செய்வதற்காக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை காலநிலை ஆராய்ச்சி மையத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

அதன்படி, மார்ச், ஏப்ரல் மாதங்களில் பசிபிக் பெருங்கடலில் பூமத்திய ரேகையை ஒட்டியுள்ள கடற்பகுதியின் மேற்பரப்பு நீரின் வெப்பநிலை, தென் மண்டல காற்றழுத்த குறியீடு ஆகியவற்றைப் பயன்படுத்தி ஆஸ்திரேலிய நாட்டிலிருந்து பெறப்பட்ட கணினி மென்பொருள் உதவியுடன் தென்மேற்குப் பருவ மழை முன்னறிவிப்பு பெறப்பட்டுள்ளது. அதன்படி, தென்மேற்குப் பருவ மழைக் காலத்தில் அரியலூர், சென்னை, ஈரோடு, கடலூர், கரூர், மதுரை, தேனி, திருப்பூர், தருமபுரி, திண்டுக்கல், காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், நீலகிரி, பெரம்பலூர், புதுக்கோட்டை, சேலம், தஞ்சாவூர்,

திருவள்ளூர், திருவண்ணாமலை, திருச்சி, வேலூர், விழுப்புரம், சிவகங்கை, திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் சராசரி மழை அளவை ஒட்டி மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேநேரம், கோவை, ராமநாதபுரம், நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டங்களில் சராசரி மழை அளவைக் காட்டிலும் குறைவாகவே மழை பெய்யும் என்று கணிக்கப்பட்டுள்ளது. சராசரி மழை அளவு என்பது கடந்த காலங்களில் பெறப்பட்ட மழை அளவில் இருந்து 19 சதவீதம் கூடவோ, குறையவோ இருக்கும்.

அதேபோல், சராசரிக்கும் குறைவான மழை அளவு என்பது 19 சதவீதம் முதல் 59 சதவீதம் வரை குறைவாக இருக்கும். தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், நீலகிரி, கன்னியாகுமரி மாவட்ட விவசாயிகளுக்கு இந்த பருவமழை உபயோகமாக இருக்கும்.

மழை குறைவாகப் பெய்யும் மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் மக்காச்சோளம், சோளம், பயறு வகைகள், சிறுதானியங்களை பயிரிட்டு பயன் பெறலாம். சராசரி மழை பெறக் கூடிய விவசாயிகள் தோட்டங்களில் பண்ணைக் குட்டைகள் அமைத்து நீரை சேமித்து பயன் பெறலாம்.

தமிழகத்தில் ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் மழை அதிகமாகவும், ஜூன், செப்டம்பர் மாதங்களில் குறைவாகவும் மழை இருக்கும். பசிபிக் பெருங்கடலின் மேல்பரப்பு வெப்ப நிலை, காற்றின் அழுத்தம் காரணமாக இவ்வாறு மழை அளவில் மாற்றங்கள் ஏற்படுவது வழக்கம். கடந்த ஆண்டில் 7 மாவட்டங்களில் மழை குறைந்திருந்த நிலையில்

இந்த ஆண்டு 4 மாவட்டங்களில் மட்டுமே குறைவான மழை பெய்யும் நிலை உருவாகியுள்ளது என்றனர் அவர்கள்.

**உளுந்தில் நச்சு உயிரி நோய் :கட்டுப்படுத்த ஆலோசனை**

உளுந்துப் பயிரில் ஏற்பட்டுள்ள நச்சு உயிரி நோயைக் கட்டுப்படுத்த விவசாயிகள் செயல்படுத்தவை குறித்து ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குநர்(பொ) முனைவர் வெ. ரவி தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு- தஞ்சை மாவட்டம், திருக்காட்டுப்பள்ளி மற்றும் பல பகுதிகளில் சித்திரைப் பட்டம் விதைப்பு செய்த உளுந்து பயிரில் மஞ்சல் தேமல் நோய் மற்றும் இலைப் பராமரிப்பு நோய் பரவலாகத் தென்படுகிறது.

இதைக் கட்டுப்படுத்த பாதிக்கப்பட்ட செடிகளை பிடுங்கி உடன் அழித்து விட வேண்டும்.

மஞ்சள் பசைப்பொறியை வயல்களில் ஆங்காங்கே வைத்து இந்நோயைப் பரப்பும் பூச்சிகளை கவர்ந்திழுத்து அழிக்கவும், தேவைப்பட்டால் மீதைல்டெமட்டான் 25 இ.சி 200 மிலி ஏக்கர் அல்லது டைமெத்தோயேட் 30 எஸ்.சி 200 மிலி ஏக்கர் அல்லது தயோமீத்தாக்சம் 75டபுள்யுடிஜி 40 கிராம் இமிடாக்க்ளோப்ரிட் 17.8 எஸ்.எல்-40 மிலி ஏக்கர் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை 15 நாட்கள் இடைவேளையில் இருமுறை தெளிப்பதன் மூலம் மேற்கண்ட நோய்களை பரப்பும் வெள்ளை ஈ மற்றும் அசுவினி பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம் எனத் தெரிவித்துள்ளார் தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குநர் முனைவர் வெ. ரவி.

**நதிகளால் நாட்டை இணைக்கலாமே!**

இந்தியாவின் மத்திய ஆட்சியில் ராணுவமும், மாநில ஆட்சிகளின் கீழ் காவல் துறையும் உள்ளன. இந்தியா பூகோள ரீதியாக மேலும் வலுவாக வேண்டுமானால், கங்கை - காவிரி நதிகளின் இணைப்பால்தான் அது முடியும். நதிகளை இணைப்பதற்கான திட்டத்தைப் பற்றி பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலேயே கே.எஸ். ராவ், சர் ஆர்தர் காட்டன், டி.ஜே. தஸ்தூர், விஸ்வேஸ்வரய்யா, சி.பி. ராமசாமி ஐயர் முதலிய மேதைகள் தொலைநோக்கோடு சிந்தித்திருக்கிறார்கள்.

1960-இல் சட்லஜ் நதியின் குறுக்கே பக்ராநங்கல் அணை கட்டப்பட்டு, பஞ்சாப் மாநிலம் இந்தியாவின் கோதுமைக் களஞ்சியமாக நேருஜி காலத்தில் மாறியது. 1961-இல் தமிழ்நாடு - கேரள மாநிலங்களுக்கு இடையில் பரம்பிக்குளம் - ஆழியாறு அணைக்கட்டை திறந்துவைத்த நேருஜி, இதுபோன்ற பல அணைக்கட்டுகள் வர வேண்டுமென்றார்.÷1960-இல் பஞ்சாபிலிருந்து பிரிந்த ஹரியாணாவின் விவசாய அபிவிருத்திக்காக, ரவி - பயஸ் இரு நதிகள் இணைக்கப்பட்டன.

2003-இல் குடியரசுத் தலைவராக அப்துல் கலாம் இருந்தபோது, இந்தியாவின் வறட்சியையும், வெள்ளப் பெருக்கையும் தவிர்ப்பதற்கு நதிகளின் இணைப்பு அவசியம் என்று கூறினார். 1998-இல் 22 கட்சிகளைக் கொண்ட வாஜ்பாயின் கூட்டணி ஆட்சியில், கேபினெட் அமைச்சர் அந்தஸ்தில் சிவசேனை கட்சியின் சுரேஷ் பிரபு தலைமையில் ஒரு குழு தேசிய நதிகள் இணைப்புக்காகவே நியமிக்கப்பட்டது.

முதல் திட்டம், தீபகற்ப நதிகளை இணைப்பது. இத் திட்டத்தின்படி, ஒடிஸாவிலுள்ள மகாநதியை ஆந்திரத்திலுள்ள கோதாவரியுடனும், கிருஷ்ணாவுடனும் இணைத்து அப்படியே கர்நாடகத்தின் காவிரி நதியுடன் இணைத்துத் தமிழ்நாட்டில் பாலாறு, பெண்ணையாறு, வைகை, தாமிரபரணி வரை 16 நதிகளோடு இணைப்பது.

வடஇந்தியாவில் ஓடும் கங்கை மற்றும் பிரம்மபுத்திராவின் வெள்ளப் பெருக்கு நீரைப் பாசன நீராகப் பயன்படுத்த சீனா, நேபாளம், வங்க தேசம் முதலிய அண்டை நாடுகளுடனும் கலந்து பேசி உருவாக்கப்பட வேண்டிய பெரிய திட்டம் அது. இத்திட்டம் நிறைவேற்றப்படுமானால், 700 கி.மீ. தூரத்திற்கு நீர்வழிப் போக்குவரத்தும், 75 ஆயிரம் மெகாவாட் நீர்மின் உற்பத்தியும், 7 கோடி ஏக்கருக்கான பாசன வசதியும் பெற முடியும்.

தென்னக நதிநீர் இணைப்புத் திட்டம் தென்னக மாநிலங்களுக்குக் கட்டாயமானதாக இல்லை. தமிழ்நாடு மாநிலத்திற்குத்தான் நதிகள் இணைப்பைவிட்டால் வேறு கதியே இல்லை. காரணம், முந்தைய ஆந்திரக்கிற்குக் கடல் போன்ற கோதாவரி, கிருஷ்ணா நதிகளே போதும். கர்நாடகத்தில் ஓடும் காவிரி நதிநீர் அவர்களுடைய தேவையை நிறைவு

செய்த பிறகுதான், தமிழகத்திற்குத் தரப்படுகிறது. கேரள மாநிலக்கிற்கோ அவர்களுடைய 46 சொந்த ஆறுகளும் அரபிக்கடலில் விழுந்து வீணாகிக் கொண்டிருந்தாலும் தமிழ்நாட்டிற்கு உதவும் எண்ணமே இன்னும் வரவில்லை. அதனால், ஒடிஸாவின் மகாநதி - காவிரி இணைப்புக் கிட்டம்தான் மிகவும் காரிய சாத்தியமானது. அதற்கு ஆந்திரத்தின் ஆதரவும் கர்நாடகத்தின் ஒத்துழைப்பும் இருந்தால்தான் நிறைவேற்ற முடியும்.

தேசிய நதிகளான கங்கை-காவிரி இணைப்புத் திட்டம் எப்படிக் கிடப்பில் போடப்பட்டதோ, அதேபோல ஒடிஸா மகாநதி - காவிரி இணைப்புத் திட்டமும் கிடப்பில் போடப்பட்டுவிட்டது. கிடப்பில் இருந்த இணைப்புத் திட்டத்தைத்தான் வாஜ்பாய் ஆட்சி 2004-இல் உயிர்ப்பித்தது. ஆனால், பதவிக்காலம் முடிந்து ஆட்சியை இழந்துவிட்டது. காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்துவிட்டது.

இந்தச் சூழ்நிலையில், காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ராகுல் காந்திதான் நதிகளின் இணைப்பு இயற்கைக்கு விரோதமானது என்று முதன்முதலாகப் பேசினார். இதனைத் தெரிவித்த அவர் நீரியல் நிபுணரல்ல.

நதிகளை இணைப்பதற்கு வனப் பகுதிகள் அழிக்கப்படுமானால், நதிகள் இணைப்பைப் பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டி வருமென்று மத்தியப் பிரதேசத்தில் பத்திரிகையாளர் விழா ஒன்றில் அன்றைய பிரதமர் மன்மோகன் சிங், ராகுலின் கருத்தை எதிரொலித்தார். தேசியத் திட்டக்குழு துணைத் தலைவர் மாண்டேக் சிங் அலுவாலியாவும் நதிகள் இணைப்புப் பற்றி அதிகமாகப் பேசத்தான் முடியுமே தவிர, நடைமுறைப் படுத்துவது எளிதானதல்ல என்றார். ஏறக்குறைய இதுவும் ராகுல் காந்தியின் கருத்தை ஆமோதிப்பதைப் போலவே அமைந்தது. நதிகளின் இணைப்புப் பற்றிய வழக்குகள் உச்சநீதிமன்றத்தில் விசாரணையில் இருந்தபோது, 2011 அக்டோபரில் அதனைப் பற்றிக் கருத்துக் கூறிய உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி எஸ்.எச். கபாடியா, நதிநீர் இணைப்புக்காக அதிக நிதிச்சுமை அரசுக்கு ஏற்படுமானால்,

உச்சநீதிமன்றம் நதிநீர் இணைப்புத் திட்டத்திற்கு ஆதரவாகத் தீர்ப்பு வழங்காது என்று பேசினார்.

இக்கருத்துகள் எல்லாமே நதிகள் இணைப்பில் நாட்டமில்லை என்ற காங்கிரஸின் கருத்துகளே. தேசியக் கட்சிகளான இரு கம்யூனிஸ்ட் கட்சிகளும் நதிகள் இணைப்பால் மாநிலக் கிளைகளின் ஆதரவை இழக்க நேரும் என்று நழுவிக் கொண்டன.

நதிகள் இணைப்பு அப்படி என்னதான் நாசத்தை ஏற்படுத்தி விடுமோ? குஜராத் எல்லையில் நர்மதா நதியிலிருந்து ராஜஸ்தான் மாநிலத்தின் தார் பாலைவனத்தின் சிறு பகுதியான ஜலோர் ஊருக்கு, 56 கிலோ மீட்டர் கால்வாய் வழியாக மனிதாபிமான அடிப்படையில் 2014 முதல் தண்ணீர் தரப்பட்டு வருகிறது. அதற்கு முன்பு அந்தப் பகுதி தார் பாலைவனத்தின் வெப்பத்திற்கு உட்பட்ட கடுமையான வறட்சிப் பகுதி. அங்குள்ள கிராம இளைஞர்களுக்கு வெளியிலிருந்து யாரும் பெண் தர மாட்டார்களாம். ஏனெனில், அப்பெண்கள் 8 கி.மீ. தூரம் சென்று குடிநீர் கொண்டுவர வேண்டுமாம். நர்மதா கால்வாயின் தண்ணீர் அங்கு கிடைத்த பிறகு, குடிநீர்ப் பிரச்னையும் தீர்ந்தது. நல்ல விவசாயமும் நடக்கிறது. வறண்ட அந்தக் கிராமத்து மக்கள் இப்போது வளமாக வாழத் தொடங்கிவிட்டார்கள்.

இத்தனைக்கும் நர்மதா நதி ராஜஸ்தான் வழியாகச் செல்வதில்லை. ஒரு கால்வாய் வெட்டித்தான் இந்தத் தண்ணீர் அங்கு கொண்டு செல்லப்பட்டிருக்கிறது. கால்வாய்த் தண்ணீரே ஒரு பாலைவனக் கிராமத்தைச் சோலைவனமாக்கி உள்ளதென்றால், இந்தியாவின் பிரதான நதிகள் இணைக்கப்பட்டால், நாடு எத்தகைய சுபிட்சமடையும் என்பதை எண்ணிப் பாருங்கள்.

கடந்த மே 12-ஆம் தேதி நாடாளுமன்றக் கூட்டத்தில் கங்கை நதி புனரமைப்புக்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றக் குழுவின் தலைவர் முரளிமனோகர் ஜோஷி, நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த அறிக்கையில், "தேசிய நதிகளை இணைப்பது என்பது நடைமுறை சாத்தியமல்ல. சிறிய நதிகளை வேண்டுமானால், அந்தந்த

மாநிலங்களுக்குள் இணைக்கலாம். பாசனநீரைப் பெருக்க வேண்டுமென்றால், வனப்பகுதிகளைப் பெருக்கி, மழையை அதிகமாகப் பெற்று அதன்மூலம் நீரைப் பெறலாம்' என்ற கருத்தை தெரிவித்துள்ளார். அதோடு மட்டுமல்லாமல், மனித முயற்சியால் நதிகளை இணைப்பது சாத்தியமில்லை. ஒருவேளை அவ்வாறு அனைத்து நதிகளையும் இணைக்கிருக்க முடியும் என்றால், அதை இயற்கையே செய்து முடித்திருக்குமே என்ற விஞ்ஞானத்திற்கு விரோதமான கருத்தையும் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். நதிகளை இணைப்பது சாத்தியமில்லை என்பதற்காக இயற்கையே அவ்வாறு செய்யவில்லை என்று கண்டுபிடித்தவர் ஜோஷி அவர்கள்தான்.

ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைக்கு நதிநீரைக் கொண்டு செல்ல வேண்டுமென்றால், அதற்குப் பல்லாயிரக்கணக்கான கிலோவாட் மின்சாரம் தேவைப்படும். அதுமட்டுமல்ல, டீசலில் இயக்கப்படும் ராட்சத பம்புசெட்டுகளும் தேவைப்படும். இது அதிகச் செலவுக்குரியது என்றும் தனக்குத்தானே முரண்பட்டும் கூறியுள்ளார்.

முரளிமனோகர் ஜோஷி இயற்பியல் பேராசிரியர். வாஜ்பாய் ஆட்சியில் அமைச்சராக இருந்தவர். வாஜ்பாய், இந்தியாவின் முதல் பிரதமர் நேருவுக்குப் பிறகு முத்திரைப் பதித்தவர். கார்கில் ஊடுருவலைக் கண்டுபிடித்து விரட்டியவர். அப்பழுக்கற்ற ஞானியாக அரசியலைத் துறந்து முதிய அரசியல்வாதிகளுக்கு முன்மாதிரியாக வாழ்ந்து வருபவர். அவருக்குப் பிரியமான திட்டம்தான் தேசிய நதிகள் இணைப்புத் திட்டம். நதிகள் இணைப்புக்கு அதிகம் செலவாகும் என்று அவருக்குத் தெரியாதா? அவருடைய தங்க நாற்கரச்சாலைத் திட்டத்திற்குக் கொஞ்சமாகவா செலவாகியது? சாலைப் போக்குவரத்தில் அது ஒரு புரட்சியை உருவாக்கவில்லையா?

அதுபோல நதிகள் இணைப்புத் திட்டமும் பாசனப் புரட்சியை உண்டாக்கும் திட்டம். அதற்கு அதிகம் செலவாவதைப்பற்றி அவர் பொருள்படுத்த

வில்லை. அதை நிறைவேற்றவே வாஜ்பாய் 2004-இல் ஓர் ஆய்வுக்

குழுவை சுரேஷ் பிரபு தலைமையில் (இன்றைய ரயில்வே அமைச்சர்) நியமித்தார்.

இப்போது நாடாளுமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்திருக்கும் ஜோஷி, வாஜ்பாய் ஆட்சியில் கல்வி அமைச்சராக இருந்தபோது ஏன் வாய்மூடி இருந்தார்? ராகுல் காந்தி, மன்மோகன் சிங், மாண்டேக் சிங் அலுவாலியா மற்றும் கம்யூனிஸ்டுகள் ஆகியோரின் அதே கருத்தை முரளிமனோகர் ஜோஷி இப்போது ஏன் முன் வைக்கிறார்? பா.ஜ.க. கட்சியிலிருந்து கொண்டே இப்படிப் பேசுவது வியப்பாக உள்ளது.

மின்சாரம் அதிகமாகச் செலவாகும் என்கிறார். ஆகட்டுமே! சூரிய ஒளி மின்சாரத்தை உற்பத்தி செய்தால், செலவு குறைந்து விடாதா?

நதிகளை இணைக்க முடியும் என்றால், இயற்கையே அதை செய்திருக்கும் என்று விஞ்ஞானத்திற்கு விரோதமான கருத்தை விஞ்ஞானப் பேராசிரியர் சொல்லலாமா?

சட்லெஜ் நதியையும், பக்ராநங்கலையும் இணைத்துத்தானே பக்ராநங்கல் அணை கட்டப்பட்டது. தாமன்கங்கா- பிஞ்சால், பார் - டாப்பி - நர்மதா ஆகிய மூன்று நதிகளின் நீரையும் இணைக்க இப்போது திட்டம் தீட்டிக் கொண்டிருப்பவர் இவரல்ல, மத்திய நீர்வளத்துறை அமைச்சர்.

மத்தியப் பிரதேசத்திலும் உத்தரப் பிரதேசத்திலும் 15 லட்சம் ஏக்கர் பூமிக்குப் பாசன வசதி செய்ய, கென் நதியையும், பெட்வா நதியையும் இணைக்கும் திட்டம் மத்திய அரசால் இப்போது நடைபெற்றுக்கொண்டு இருக்கிறதே.

இக்கிட்டக்கால் பாசனநீர் மட்டுமல்லாமல், மக்கியப் பிரகேச வனத்திலுள்ள விலங்குகளுக்கான தண்ணீரும் உத்தரவாதப் படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான செலவு ரூபாய் 9 ஆயிரம் கோடி. இத்திட்டத்தால் பண்டல்கண்ட் வறட்சிப்பகுதி வளம் பெறப்போகிறது.

நதிநீர் இணைப்பு இயற்கைக்கே விரோதம் என்று ஜோஷி கருத்துச் சொல்வதற்கு எங்கே போய் ஜோசியம் பார்த்தார் என்று தெரியவில்லை. நதிகள் இணைப்பு காரிய சாத்தியமானது. விஞ்ஞானத்திற்கோ, இயற்கைக்கோ விரோதமானதல்ல. இதற்கான ஆதாரங்கள் நிறைய உள்ளன.

இந்த நிலையில் ஜோஷி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கை

அவசியமற்றது; தமிழ்நாட்டிற்கு அநியாயம் செய்வதாகும். அரசியலைக் கடந்து இதனை எதிர்க்க வேண்டிய நமது தமிழ்நாட்டுக் கட்சிகள் ஏனோ மௌனமாக உள்ளன.

## நதிகளால் நாட்டை இணைக்கலாமே!

வரத்து அதிகரிப்பால் ராஜபாளையத்தில் உருட்டு உளுத்தம்பருப்பு கிலோவுக்கு ரூ.10 குறைந்துள்ளது.

உருட்டு உளுந்தம்பருப்பு பிப்ரவரியில் கிலோ ரூ.135ஆக இருந்தது. விளைச்சல் குறைவால் படிப்படியாக விலை அதிகரித்து இம்மாத துவக்கத்தில் கிலோ ரூ.175க்கு மொத்த விலைக் கடைகளில் விற்றது. தற்போது வரத்து தொடங்கியுள்ளதால் கிலோவுக்கு ரூ. 10 குறைந்துள்ளது. நாட்டு துவரம்பருப்பு கிலோ ரூ. 145 ஆகவும் பாசிப்பருப்பு கிலோ ரூ. 90ஆகவும், கடலைப் பருப்பு கிலோ ரூ.80 ஆகவும் உள்ளது.

## வேளாண்மை வளர்ச்சிப்பணிகள்: ராமநாதபுரம் ஆட்சியர் ஆய்வு

ராமநாதபுரம் அருகேயுள்ள திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியத்தில் வேளாண்மை வளர்ச்சிப் பணிகளை மாவட்ட ஆட்சியர் எஸ்.நடராஜன் செவ்வாய்க்கிழமை நேரில் ஆய்வு செய்தார்.

திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியம் ஆலங்குளம் கிராமத்தில் வேளாண் கருவிகள் பரவலாக்கும் திட்டத்தின் கீழ் தமிழக அரசின் மூலம் ரூ.10 லட்சம் மானியம் பெற்று திருமுருகன் என்பவர் செயல்படுத்தி வரும் குறைந்த விலையில் வாடகைக்கு வேளாண் கருவிகள் வழங்கும் மையத்தினை பார்வையிட்டார்.

தினைக்குளம் கிராமத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.3.84 லட்சம் மதிப்பிலான மானியம் பெற்று ஜவாஹீர் என்பவர் செயல்படுத்தி வரும் சூரிய சக்தியின் பம்ப் செட்டுகளையும் பார்வையிட்டார்.

## தென்மேற்குப் பருவமழை: ஆலோசனைக் கூட்டம்

கோவை மாவட்டத்தில் தென்மேற்குப் பருவமழையை எதிர்கொள்வது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஆட்சியர் அர்ச்சனா பட்நாயக் தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

அனைத்துத் துறை அலுவலர்கள் பங்கேற்ற இந்தக் கூட்டத்தில் ஆட்சியர் அர்ச்சனா பட்நாயக் பேசியது:

தென்மேற்கு பருவ மழையால் மக்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாதவாறு வருவாய்த் துறை, பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலை, காவல் துறையினர் ஒருங்கிணைந்து, பணிகளை திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும்.

நெடுஞ்சாலைத் துறை மூலம் சாலைகள், பாலங்கள் சீராக உள்ளனவா என்பதை கண்காணிக்க வேண்டும். சேதம் ஏற்படும் பகுதிகளுக்கு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மாநகராட்சி பகுதிகளில் புதை சாக்கடைகள், கழிவுநீர் கால்வாய்களில் தண்ணீர் தேங்காமல் செல்கின்றனவா என அடிக்கடி பார்வையிட வேண்டும்.

அதேபோல், நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிப் பகுதிகளிலும் கழிவு நீர் கால்வாய்கள் சரியாக உள்ளனவா என்று சம்பந்தப்பட்ட நிர்வாகம் கண்காணிக்க வேண்டும். பொது சுகாதாரத் துறையின் மூலம் அரசு தலைமை மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையம், துணை சுகாதார நிலையங்களில் போதிய மருந்துகள் இருப்பில் வைத்துக்கொள்ளவும், மருத்துவர்கள் குழுவை சுழற்சி முறையில் பணிகளை கண்காணிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாவட்ட வழங்கல் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகியவை பொதுமக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை சம்பந்தப்பட்ட ரேஷன் கடைகளில் இருப்பில் வைத்துக் கொள்ள வேண்டும். பள்ளி கட்டடங்களை ஆய்வு செய்து, பள்ளிகளில் தண்ணீர் தேங்காமல் இருப்பதை பள்ளிக் கல்வித் துறை உறுதி செய்து கொள்ள வேண்டும். அதேபோல் போக்குவரத்துத் துறை, கால்நடை பராமரிப்புத்

துறை, குடிநீர் வடிகால் வாரியம், தீயணைப்புத் துறையினர் தங்களது துறை தொடர்பான மீட்பு, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கண்காணிப்பதுடன், சம்பந்தப்பட்ட பிற துறையின் அலுவலர்களுடன் பேசி நிலைமை குறித்து உறுதி செய்து கொள்ள வேண்டும் என்றார். மாவட்ட வருவாய் அலுவலர் தா.கிருஸ்துராஜ், பொள்ளாச்சி சார் ஆட்சியர் காயத்ரி கிருஷ்ணன், வருவாய் கோட்டாட்சியர்கள் எஸ்.மதுராந்தகி, சின்னசாமி உள்ளிட்ட அதிகாரிகள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## தென்மேற்கு பருவமழை: நீலகிரியில் முன்னேற்பாடுகள் தீவிரம்

நீலகிரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை ஜூன் மாதத்தில் விரைவிலேயே தொடங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதையடுத்து, முன்னேற்பாடு நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் உதகையில் நடைபெற்றது.

உதகையில் உள்ள மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்ட கூட்டரங்கில் மாவட்ட ஆட்சியர் பி.சங்கர் தலைமையில் திங்கள்கிழமை நடைபெற்ற இக்கூட்டத்தில், அனைத்து துறை அலுவலர்களுடன் முன்னேற்பாடு மற்றும் மீட்புப் பணிகள் மேற்கொள்வது தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், தென்மேற்கு பருவமழைக் காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுக்கும் உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டது. அத்துடன் அனைத்து துறை அலுவலர்களுடன் அவசர காலங்களில் பாதிக்கப்படும் பொதுமக்களைத் தங்க வைக்க தயார் நிலையில் உள்ள பள்ளிகள் குறித்த விவரமும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை உடனுக்குடன் மேற்கொள்ளப்பட வருவாய்த் துறை, காவல் துறை, தீயணைப்புத் துறை, நெடுஞ்சாலைத் துறை, மின்வாரியம், பொதுப் பணித் துறை, குடிமைப்பொருள் அலுவலர்களும் தயார் நிலையில் உள்ளனர் என அறிவிக்கப்பட்டது.

தொடர்ந்து, ஆட்சியர் பேசுகையில், மழை மற்றும் இயற்கை இடர்பாடுகளால் பாதிப்பு ஏற்படும்போது பொதுமக்கள் அவசர

தொலைபேசி எண்ணான 1077-ஐ தொடர்பு கொண்டு விவரங்களைத் தெரிவிக்கலாம் என்றார்.

இதில், மாவட்ட வருவாய் அலுவலர் பாஸ்கர பாண்டியன் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## குறுவை சாகுபடிக்குத் தேவையான இடுபொருள்கள் தயார்

தஞ்சாவூர் மாவட்டத்தில் குறுவை பருவ நெல் சாகுபடிக்குத் தேவையான இடுபொருள்கள் தயார் நிலையில் உள்ளன என்றார் மாவட்ட ஆட்சியர் என். சுப்பையன்.

மாவட்ட ஆட்சியரகத்தில் வேளாண் துறை சார்பில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற குறுவை சாகுபடி 2016-க்கான ஆயத்தப் பணிகள் குறித்து அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டத்துக்குத் தலைமை வகித்த அவர் பேசியது:

நிகழ் குறுவை சாகுபடி 32,250 ஹெக்டேர் பரப்பளவில் நடைபெறவுள்ளது. இதற்கு தேவையான விதைகள், உரங்கள் தயார் நிலையில் உள்ளன.

கடந்தாண்டு குறுவை சாகுபடி உற்பத்தி இலக்கு 2.11 லட்சம் டன்கள் எட்டப்பட்டது. அதுபோல, நிகழாண்டும் இலக்கை சிறப்பாக எட்டுவதற்கான பணிகளை அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும் என்றார் ஆட்சியர்.

பயிர் விளைச்சல் போட்டி:

மேலும், மாவட்ட அளவில் நடத்தப்பட்ட நெல் மற்றும் உளுந்து பயிர் விளைச்சல் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்.

இதில், நெல் பயிர் விளைச்சல் போட்டியில் ஒரு ஹெக்டருக்கு 10,035 கிலோ மகசூலுடன் முதலிடம் பெற்ற திருவிடைமருதூர் வட்டாரம், திருவிசைநல்லூர் கிராம விவசாயி பாஸ்கரன் ரூ. 15,000-ம், ஒரு ஹெக்டருக்கு 10,015 கிலோ மகசூலுடன் இரண்டாமிடத்தைப் பெற்ற ஒரத்தநாடு வட்டாரம் கண்ணுக்குடி கிராமத்தைச் சேர்ந்த கோவிந்தராஜ் பரிசாக ரூ. 10,000-ம் பெற்றனர்.

இதேபோல, உளுந்து பயிர் விளைச்சல் போட்டியில் ஒரு ஹெக்டேரில் 3,900 கிலோ மகசூல் எடுத்து முதலிடம் பெற்ற ஒரத்தநாடு வட்டாரம்,

தலையாமங்கலத்தைச் சார்ந்த விவசாயி அப்பர் ரூ. 10,000 பரிசையும், ஹெக்டேருக்கு 2,550 கிலோ எடுத்து இரண்டாமிடத்தைப் பெற்ற அம்மாபேட்டை வட்டாரம், மேலகொருக்குப்பட்டு கிராமத்தைச் சார்ந்த விவசாயி முத்துசாமி ரூ. 5,000 பரிசையும் பெற்றனர்.

பட்டுக்கோட்டை சார் ஆட்சியர் டி.எஸ். ராஜசேகர், வேளாண் துறை இணை இயக்குநர் ஆர். ஞானஒளி, ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) சொக்கலிங்கம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## 1,200 டன் அரிசி விருதுநகருக்கு அனுப்பி வைப்பு

நீடாமங்கலத்தில் இருந்து விருதுநகருக்கு 1,200 டன் சன்னரக அரிசி பொது விநியோகத் திட்டத்துக்காக நேற்று அனுப்பி வைக்கப்பட்டது.

பாமணி மத்திய சேமிப்புக் கிடங்கு, சுந்தரக்கோட்டை நவீன அரிசி ஆலை ஆகியவற்றிலிருந்து 100 லாரிகளில் இந்த சன்னரக அரிசி மூட்டைகள், நீடாமங்கலம் ரயில் நிலையத்துக்கு திங்கள்கிழமை கொண்டு வரப்பட்டு சரக்கு ரயில் பெட்டிகளில் ஏற்றப்பட்டது. 21 பெட்டிகளில் அரிசி மூட்டைகள் ஏற்றப்பட்டன. இதைத் தொடர்ந்து ரயில் விருதுநகருக்கு புறப்பட்டுச் சென்றது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தரிசு நிலமாக இருப்பதை விட நீண்ட கால பயிர் வளர்க்கலாம்'

ஆர்.கே.பேட்டை: 'பயிர் செய்ய வாய்ப்பு இல்லாதவர்கள், நிலத்தை தரிசாக விட்டு வைப்பதை விட, நீண்ட கால பயிர் செய்து பயன் பெறலாம்' என, விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

நிலம் ஒரு நிரந்தர சொத்து என்ற அளவில் வாங்கி போட்டு உள்ளவர்களும், பயிர் செய்ய போதிய வேலையாட்கள் கிடைக்காதவர்களும், நிலத்தை தரிசாக போட்டு வைக்கின்றனர்.

வேறு நபர்களுக்கு குத்தகைக்கு விட்டாலும், சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. இதனால், பெரும்பாலான இடங்களில், நிலம் தரிசாக போடப்பட்டு உள்ளது.

இத்தகைய தரிசு நிலங்களில், நீண்ட கால பயிர்களாக, சவுக்கு, யூகலிப்டஸ் போன்ற மரக்கன்றுகளை நட்டு பயன் பெறலாம் என, விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

சவுக்கு, யூகலிப்டஸ் போன்ற மரங்கள், பல ஆண்டுகளுக்கு பின், வெட்டி விற்பனை செய்யப்படுகின்றன. குறிப்பாக, யூகலிப்டஸ் செடிகளுக்கு தொடர் பராமரிப்பு தேவையில்லை. தண்ணீர் பாசனமும் முதல் மூன்று மாதங்களுக்கு இருந்தால் போதுமானது.

பள்ளிப்பட்டு பகுதியில், தற்போது யூகலிப்டஸ் மரக்கன்று வளர்ப்பதில் விவசாயிகள் சிலர் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## முயல் வளர்ப்போம் வளம் பெறுவோம்!



தமிழ்நாட்டில் கால்நடை வளர்ப்பு லாபகரமான தொழிலாக மாறி விட்டது. அரசின் திட்டங்களாலும், தமிழ்நாடு கால்நடை அறிவியல்

பல்கலை கழக பயிற்சிகளாலும், மக்கள் அதிகம் பேர் அசைவத்திற்கு மாறி வருவதாலும் காடை தொடங்கி முயல் வரை கால்நடை வளர்ப்போர் அதிகமாகி வருகின்றனர்.

பலருக்கு வேலை வாய்ப்பு நல்கி வரும் லாபகரமான தொழிலாக நகரங்களிலும், கிராமங்களிலும் பிரபலமாகி வருகிறது. நபார்டு போன்ற வங்கிகள் கடனும் வழங்கி வருகின்றன. இறைச்சி, தோல், ரோமம் ஆகியவற்றிற்காக முயல் வளர்ப்பு பிரபலமாகி வருகிறது. முயல்கள் வேகமாக இனப்பெருக்கம் செய்பவை. தாம் உட்கொள்ளும் தாவர புரதங்களில் இருந்து 20 சதவிகிதம் வரை இறைச்சியாக மாற்ற வல்லவை. பண்ணை அமைத்து முயல் வளர்த்தால் நல்ல லாபம் பெறலாம். நார்ச்சத்து உள்ள தாவரங்களை உட்கொண்டு நல்ல தரமான இறைச்சியை முயல்கள் தருகின்றன.

முயல்கள் மாறுபடும் தட்ப வெப்ப நிலைகளினாலோ, நோய் கிருமிகளினாலோ பாதிக்கப்படுவதில்லை. இதர விலங்குகளில் இருந்து கிடைக்கும் இறைச்சியோடு, முயல் இறைச்சியை ஒப்பிட்டால், இது கொழுப்பு சத்து குறைவாகவும், 'ஸ்டீயரிக்' மற்றும் 'ஒலியிக்' கொழுப்பு சத்து குறைவாகவும் உள்ளது. சில வகை உயிர் சத்துக்களும், தாது உப்புக்களும் அதிக அளவில் உள்ளன.

முயல்களில் இருந்து இறைச்சியை மட்டுமின்றி, தோலில் இருந்தும், ரோமத்தில் இருந்தும் அழகு சாதனங்களை உற்பத்தி செய்யலாம். முயல்களின் கழிவு பொருட்கள் விவசாயத்திற்கும் சிறந்த உரமாக பயன்படுகிறது. நல்ல வெளிச்சம், வெப்பநிலை, ஈரப்பதம், காற்றோட்டம் உள்ள இடத்தில் முயல் பண்ணை அமைக்கலாம். வெள்ளை ஜெயன்ட், பிளமிஷ், நியூசிலாந்து வெள்ளை, சோவியத் சின்சில்லா, கலிபோர்னியன் ஆகியவை இறைச்சிக்காகவும், ஆல்கோரா ரகம் ரோமத்திற்காகவும் ரெக்ஸ், சேஷன், போலிஷ் வெள்ளை ஆகியவை அழகுக்காகவும் வளர்க்கப்படுகின்றன.

முயல்களை வளர்க்கப் பயிற்சி பெற்று நவீன முறையில் விஞ்ஞான பூர்வமாக வளர்க்க வேண்டும். பண்ணைகளில் சிறிய எண் பொறிக்கப்பட்ட வளையத்தை பின் அல்லது பிளாஸ்டிக் பட்டைகளை காதுகளில் இடுக்கி போல் பொருத்தலாம். இளம் குட்டிகளில் காதில்

பச்சை குத்துவது முயல்களை அடையாளம் வைத்து கொள்ள உதவும். நவீன பராமரிப்பில் கவனம் செலுத்த வேண்டும். பசுந்தீவனம், (புல் வகை, பசுந்தீவனம்), மரவகை பசுந் தீவனங்கள், கலப்பு தீவனம் கொடுக்க வேண் டும். கையாளும் முறைகளில் இன விருத்தி பராமரிப்பு, நோய்கள், பண்ணைகளில் வைத்திருக்க வேண்டிய பதிவேடுகளை பற்றி அறிந்திருக்க வேண்டும்.

**-எம். ஞானசேகர், தொழில், விவசாய ஆலோசகர், சென்னை. அலைபேசி: 93807 55629**

## மலைத்தோட்ட பயிர்களின் மகத்துவம்



இந்தியாவில் பல்வேறு பயிர்கள் சாகுபடிக்கு உகந்த பருவநிலை நிலவினாலும், அதிகளவு வருமானம் பார்த்திட உதவும் முக்கியப் பயிர்கள் வரிசையில் மலைத்தோட்டப் பயிர்கள் முதலிடம் வகிக்கின்றன. இந்த வகையில் தென்னை, முந்திரி, காபி, தேயிலை, ரப்பர், வெற்றிலை, பாக்கு, கொக்கோ முதலிய பயிர்கள் பல உள்ளன. நம் நாட்டில் கிட்டத்தட்ட 3,900 ஏக்கர் பரப்பில் 6,200 மெட்ரிக் டன் உற்பத்தி ஆகிறது. ஒவ்வொரு மலைத்தோட்டப் பயிர் சாகுபடிக்கும் தனியே வளர்ச்சி வாரியம் மற்றும் ஆராய்ச்சி திட்டங்கள் உள்ளன. இந்தியாவில் உள்ள அனைத்து மாவட்டத்திலும் ஏதாவது ஒரு மலைத்தோட்டப் பயிர் சாகுபடி வளர உகந்த சூழல் உள்ளது. உறுதியாக

பயிர் திட்டத்தில் இவற்றை சேர்த்து முறையாக திட்டமிட்டு சேர்ந்து வளர்த்தால் நீடித்த லாபம் பெறலாம்.

நீர் வசதி இருப்பின் இந்தப் பயிர்களில் பல மடங்கு லாபம் எடுத்தல் எளிது. மண்வளமாக இருப்பின் இன்னும் நல் வாய்ப்பு. பருமழை தவறாது பெய்து, போதிய வேலை ஆட்கள் கிடைத்தால், இந்த பயிர்களில் மதிப்புக்கூட்டியும் பலவகை வருமான வாய்ப்புகளை உருவாக்கலாம். இந்திய ஏற்றுமதியில் இந்த பயிர்கள் தனி இடம் பிடித்துள்ளதால், இவற்றை விதைப்பு முதல் அறுவடை வரை இயற்கை வேளாண் முறைகள் கையாண்டால் தரமான விளைபொருள் கிடைப்பது உறுதி. அதற்கு விலையும் பல மடங்கு உள்ளது.

பரவலாக இவற்றை பற்றி பெரும்பாலானோர் கருத்து பரிமாறி கொள்ளாததால் பலவகை உத்திகள் இந்த பயிர் சாகுபடியாளர்களால் கடைப்பிடிக்கப்படவில்லை. அதிக நிலப் பரப்பு சிலரிடம் உள்ளதால், அந்தந்த பரப்புக்கு மூலதனமாக முதலீடு செய்ய தயாராக இல்லாமல் உள்ள விவசாயிகள் நல்ல விழிப்புணர்வு பெற வேண்டும். குறிப்பாக தென்னையில் வயதுக்கு ஏற்ப மண்வளம், நீர் ஆதாரத்துக்கு ஏற்ப ஆண்டுப் பயிர்கள், பல்லாண்டு பயிர்கள் என முறையாக தேர்வு செய்து நட கிட்டத்தட்ட 60 பயிர்கள் உள்ளன. இதே போல் காபி, முந்திரி முதலிய இணைப் பயிர்கள் பலவற்றுடன் லாபம் பார்க்க உதவுபவை.

ஊடுபயிர் எந்தப் பயிர் நல்ல நிலம் மேம்பாட்டுக்கும், முக்கிய பயிர் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் என்பதை தொழில்நுட்ப ஆலோசனை பெற்று ஒரு ஏக்கரில் சுமார் ரூ.5 லட்சம் வரை முறையான பயிர் தேர்வு மூலம் வரவு பெறலாம். இதற்கு உரிய உத்திகள் பல உள்ளன. **- பா.இளங்கோவன், விவசாய ஆலோசகர் பாப்பநாயக்கன்புதூர்,கோவை, அலைபேசி 98420 07125**

**பிரதமரின் 'முத்ரா' தொழில் கடனுதவி திட்டம்**

இந்திய அரசு தொழிலுக்கும், விவசாயத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்து பல்வேறு கடன்கள், மானியங்கள், உதவிகள் செய்து வருகிறது. அவ்வகையில் பிரதமரின் 'முத்ரா யோஜனா' (மைக்ரோ யூனிட்ஸ்

டெவலப்மென்ட் அண்ட் ரீபைனான்ஸ் ஏஜன்சி) எனும் திட்டம் சிறு, குறுந்தொழில் செய்வோருக்கு தேவையான கடன் சரியான நேரத்தில் கிடைக்க வகை செய்கிறது. இதற்காக மூன்று திட்டங்களை மத்திய அரசு அறிமுகம் செய்துள்ளது.

* சிசு திட்டம்: சிறு தொழில் வியாபாரத்திற்கு ரூ.50 ஆயிரம் வரை கடன்.
* கிஷோர் திட்டம்: ரூ.50 ஆயிரம் முதல் ரூ.5 லட்சம் வரை கடன்.
* தருண் திட்டம்: ரூ.5 முதல் ரூ.10 லட்சம் வரை சிறந்த தேவையான திட்டங்களுக்கு கடன் பெற முடியும்.

சிறிய தொழில்களுக்கு உதவ, அவர்களை பதிவு செய்ய ஏழை, எளிய மக்கள் முன்னேற, விவசாயிகள், சிறு வியாபாரிகள் தனியாரிடம் கடன் பெற்று கஷ்டப்படுவதை தடுக்க எஸ்.சி., மற்றும் எஸ்.டி., பிரிவுக்கு முன்னுரிமை தர இத்திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. சிறு ஓட்டல், விவசாய இயந்திரங்கள், சலூன் முதல் ரிப்பேரிங் கடை வரை கடன் பெறலாம். அனைத்து அரசு, தனியார் வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், கிராம வங்கிகள் இக்கடன் பெறலாம். கடன் பெற ரேஷன் கார்டு அல்லது ஆதார் அடையாள அட்டை, இரு புகைப்படம், மிஷினரி கொட்டேஷன், லைசென்ஸ், சான்றிதழ், ஜாதி சான்று கொண்டு செல்ல வேண்டும். புதிய காப்பீட்டு திட்டங்களிலும் சேர முடியும். www.mudra.gov.in. தொடர்புக்கு 1800 11 0001.

## 65 ஆயிரம் விவசாயிகளுக்கு 'மண் வள அட்டை' வழங்கல்

ஈரோடு: "ஈரோடு மாவட்டத்தில், 65 ஆயிரம் விவசாயிகளுக்கு 'மண் வள அட்டை வழங்கப்பட்டுள்ளதாக" வேளாண் உதவி இயக்குனர் சாவித்ரி, மூத்த வேளாண் அதிகாரி ஜெயமணி, சுமையாள் ஆகியோர் தெரிவித்தனர்.

மேலும், அவர் கூறியதாவது: கடந்த, 2015ம் ஆண்டை, 'உலக மண் வள ஆண்டாக' யுனெஸ்கோ அறிவித்ததால், 'மண் வள அட்டை இயக்கம்' (சாயில் மிஷன் ஹெல்த் கார்டு) திட்டம் மத்திய அரசால் துவங்கப்பட்டது. 2016-17 ம் ஆண்டில், மாவட்டத்துக்கு, ஒரு லட்சம் விவசாயிகளுக்கான

மண் பரிசோதனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.தற்போது, 65 ஆயிரத்து, 41 விவசாயிகளுக்கு மண் மாதிரி பரிசோதனை முடிவுடன் கூடிய, மண் வள அட்டை வழங்கப்பட்டுள்ளது. இதனால், எந்த மண்ணுக்கு எந்த பயிர் ஏற்றது, உரங்களில் எதை தவிர்க்கலாம், எதை அதிகமாக பயன்படுத்த வேண்டும் என்பதை பரிந்துரைக்கலாம். ஒரு மண் மாதிரி பரிசோதனை, மூன்று ஆண்டுகளுக்கு பயன்படுத்தலாம். அதன்பின் வேறு மாதிரி எடுக்க வேண்டும். தேசிய அளவில் ஒரே மாதிரியான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதால், தேசிய அளவில் மண்ணின் தன்மை, மாற்றங்களைக்கூட இதன் மூலம் கண்டறியலாம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## நாற்றுகளை பெற அழைப்பு

ஊட்டி: தும்மனட்டியில் அமைக்கப்பட்டுள்ள 'கார்னேஷன் நர்சரி'யில் இருந்து, நாற்றுகளை பெற, விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நீலகிரி சிறு, குறு மலர் சாகுபடியாளர்களின் நலன் கருதி, மாநில அரசின், 1.40 கோடி ரூபாய் நிதியுதவியில், தோட்டக்கலை துறை மூலம், ஊட்டி தும்மனட்டி பண்ணையில்,'கார்னேஷன் நர்சரி' அமைக்கப்பட்டுள்ளது.

கார்னேஷன் செடிகளுக்கான தாய் நாற்றுகள், இத்தாலி பன்னாட்டு நிறுவனத்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு, செடிகள் வளர்க்கப்பட்டுள்ளன.

இதில், சிகப்பு (டர்போ ரெட்), ஆரஞ்சு (சோலெக்ஸ் ஆரஞ்சு), இளஞ்சிகப்பு (பிக் ஒன், பேபி பிங்க்) நிற பூக்கள் தரும் செடிகள், இரு நிறங்களை கொண்ட 'எக்ஸ்பிரஸ் கோலம்', 'ஈசி கோலம்' என, ஐந்து ரக கார்னேஷன் நாற்றுகள் தயார் நிலையில் உள்ளன.

நீலகிரி கலெக்டர் சங்கர் அறிக்கையில்,"மலர் சாகுபடியாளர்களுக்கு கார்னேஷன், நாற்றுகள் ஜூன் முதல் வாரத்தில் இருந்து வினியோகிக்கப்படும். நாற்று தேவைப்படும் விவசாயிகள், ரோஜா பூங்கா, உதவி தோட்டக்கலை உதவி இயக்குனர், தும்மனட்டி அரசு

தோட்டக்கலைப் பண்ணையில் நேரடியாக முன்பதிவு செய்து, மலர் நாற்றுகளை பெற்றுக் கொள்ளலாம்," என கூறியுள்ளார்.

## 'வன வளத்தை பெருக்கினால் எதிர்காலம் சிறக்கும்'

ஊட்டி: 'வன வளத்தை பெருக்க உறுதி எடுக்க வேண்டும்' என, கோடை விழாவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஊட்டி எச்.ஏ.டி.பி., மைதானத்தில், மாவட்ட நிர்வாகம், சுற்றுலா துறை சார்பில் நடத்தப்பட்ட, கோடை விழாவின் நிறைவு நாள் நிகழ்ச்சி நேற்று நடந்தது. மாவட்ட வருவாய் அலுவலர் பாஸ்கரபாண்டியன் வரவேற்றார்.

கலெக்டர் சங்கர் தலைமை வகித்து பேசுகையில்,"நீலகிரியில் இயற்கையை ரசிக்கும் சுற்றுலா பயணிகள், இயற்கையை பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ள வேண்டும்; அதற்காக தான் இத்தகைய விழாக்கள் நடத்தப்படுகின்றன.

ஒவ்வொருவரும் தங்களின் பிறந்த நாள், திருமண நாளின் போது, மரக்கன்று நடும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்; இயற்கையை பேணி காக்கவும், வன வளத்தை பெருக்கவும், ஒவ்வொருவரும் உறுதி எடுக்க வேண்டும். அப்போது தான் எதிர்காலம் சிறக்கும்," என்றார்.

கோடை விழாவில், தென்னக பண்பாட்டு மையம் சார்பில் நடத்தப்பட்ட பல்வேறு மாநில கலை, கலாச்சார நிகழ்ச்சிகளில் பங்கேற்ற கலைக் குழுவினருக்கும், மகளிர் திட்டம் சார்பில், அரங்குகள் அமைத்திருந்த, மகளிர் குழுவினர் உட்பட விழாவுக்கு உறுதுணையாக இருந்த அரசு, தனியார் துறையினருக்கு, மாநில சுற்றுலா துறை அமைச்சர் வெல்லமண்டி நடராஜன் நினைவுப் பரிசு வழங்கி, பேசுகையில்,"ஊட்டியில் எச்.ஏ.டி.பி., திட்டத்தின் கீழ், பல கோடி ரூபாய் செலவில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. ஊட்டி முக்கிய சுற்றுலா தலமாக இருப்பதால், இப்பகுதிக்கு தேவையான பணிகள் அனைத்தும் விரைவில் செய்யப்படும். குறிப்பாக ஊட்டி நகரில்

ஏற்பட்டுள்ள சுகாதார பிரச்னைகளுக்கு தீர்வு காணவும் நடவடிக்கை எடுக்கப்படும்," என்றார்.

ராஜ்ய சபா எம்.பி., அர்ஜு ணன், நீலகிரி எம்.பி., கோபால

கிருஷ்ணன், 'ஆவின்' தலைவர் மில் லர், குன்னுார் எம்.எல்.ஏ., சாந்தி ராமு, முதுமலை புலிகள் காப்பக கள அலுவலர் சீனிவாச ரெட்டி ஆகியோர் பேசினர். சுற்றுலா அலுவலர் (கூடுதல் பொறுப்பு) விஜயகுமார் நன்றி கூறினார்.

## கோடைமழையால் விவசாயிகள் மகிழ்ச்சி

கன்னிவாடி;தருமத்துப்பட்டி, செம்பட்டியில் நேற்று பெய்த கோடைமழையால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.இரு வாரங்களாக அக்னி வெயிலின் தாக்கம் வழக்கத்தை விட அதிகமாக இருந்த நிலையில், நான்கு நாட்களுக்கு முன் கொடைரோடு, அம்மையநாயக்கனுார், காமலாபுரம், சின்னாளபட்டி பகுதிகளில் மழை பெய்தது. தருமத்துப்பட்டி, செம்பட்டியில் மேகமூட்டம் மட்டுமே காணப்பட்டது.

கோடை மழையை எதிர்நோக்கி, சில நாட்களாக விவசாயிகள் உழவு செய்து நிலத்தை தயார்படுத்தும் பணியில் ஆர்வம் காட்டி வந்தனர். அக்னி நட்சத்திர காலம் முடிந்தும், இரு நாட்களாக பகலில் வெயிலின் தாக்கம் தொடர்ந்தது. நேற்று மதியம் வரை வெயில் சுட்டெரித்த நிலையில், கசவனம்பட்டி, தருமத்துப்பட்டி, எஸ்.பாறைப்பட்டி, வண்ணம்பட்டி, செம்பட்டி பகுதிகளில் சாரல் மழை பெய்தது. சில இடங்களில் 30 நிமிடங்களுக்கு மேல் மழை நீடித்ததால் வெப்பம் தணிந்தது.

உழவுப்பணி முடித்து தயார் நிலையில் இருந்த இப்பகுதி விவசாயிகளுக்கு, நேற்றைய மழை மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கோடை சாகுபடி பணிகள் விரைவில் துவக்குவதற்கான வாய்ப்பு உருவாகியுள்ளது.

## கறவைமாடு, நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்த பயிற்சி

கரூர்: கால்நடை மருத்துவ பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில், வரும், 21ம் தேதி கறவை மாடு வளர்ப்பு பயிற்சியும், 28ம் தேதி நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சியும் நடக்கிறது.

இதுகுறித்து மையத்தின் தலைவர் வசந்தகுமார் வெளியிட்ட அறிக்கை: கால்நடை பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில், வரும், 21ம் தேதி கறவை மாடு வளர்ப்பு குறித்த இலவச பயிற்சி அளிக்கப்பட உள்ளது. பயிற்சியில் பண்ணை வீட்டமைப்பு, தீவன மேலாண்மை, கறவை மாடுகளை தாக்கும் நோய்கள் அவற்றை தடுக்கும் முறைகள், பண்ணைக்கான காப்பீடு மற்றும் பண்ணை பொருளாதாரம் ஆகிய தலைப்புகள் மற்றும் பசுந்தீவன உற்பத்தி குறித்து பயிற்சி வழங்கப்படும். வரும், 28ம் தேதி நடக்கும் நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சியில் கோழி வளர்ப்பு முறைகள், குடற்புழு நீக்கம், தடுப்பூசி அளித்தல், விற்பனை உத்திகள் மற்றும் பண்ணை பொருளாதாரம் குறித்த பயிற்சி வழங்கப்படுகிறது. பயிற்சியில் கலந்து கொள்ள விருப்புவோர் காலை, 10.30 மணிக்கு பயிற்சி மைய வளாகத்திற்கு வர வேண்டும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## ரூ.36 லட்சத்துக்கு மஞ்சள் வர்த்தகம்

நாமகிரிப்பேட்டை: நாமகிரிப்பேட்டை ஆர்.சி.எம்.எஸ்.,சில் நேற்று மஞ்சள் ஏலம் நடந்தது. இதில், விரலி ரகம் அதிகபட்சமாக 100 கிலோ மூட்டை, 10 ஆயிரத்து, 229 ரூபாய், குறைந்தபட்சம், 8,779 ரூபாய்க்கும் ஏலம் போனது. உருண்டை ரகம் அதிகபட்சம், 9,219 ரூபாய், குறைந்தபட்சம், 8,269 ரூபாய்க்கும் விற்பனையானது. பனங்காலி ரகம் அதிகபட்சம், 21 ஆயிரத்து, 102 ரூபாய், குறைந்தபட்சம், 12 ஆயிரத்து, 800 ரூபாயக்கும் ஏலம் போனது. விரலி, 450 மூட்டைகளும், உருண்டை,

215, பனங்காலி, 35 என, மொத்தம், 700 மூட்டைகளும், 36 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

## மாவட்டத்தில் தொடரும் மழை: மக்கள், விவசாயிகள் மகிழ்ச்சி

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களுக்கு முன் கொளுத்திய வெயிலால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டு வந்தனர். குறிப்பாக, ஏரி, குளங்கள், அணை, கிணறுகளில் உள்ள நீர் மட்டம் வெயிலால் குறைந்ததால், பயிர்கள் காய்ந்து வந்ததை கண்டு விவசாயிகள் வேதனை அடைந்தனர். இந்நிலையில், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து பெய்து வரும் மழையால், தர்மபுரி ரெட் ஏரி உள்பட, குறிப்பிட்ட ஏரி, குளங்களுக்கு தண்ணீர் வரத்து துவங்கியுள்ளது. மேலும், மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நேற்று முன்தினம், மாவட்டத்தில் அதிகபட்சமாக தர்மபுரியில், 6 மில்லி மீட்டர் மழையளவு பதிவானது. இதை தொடர்ந்து, பென்னாகரத்தில், 4, ஒகேனக்கல்லில், 3.60 மி.மீ., மழையளவு பதிவானது. நேற்று காலை முதல் வானம் மழை மேகத்துடன் காணப்பட்ட நிலையில், மதியம், 1 மணிக்கு மேல், பழைய தர்மபுரி, செல்லியம்பட்டி, அரூர் அடுத்த அச்சல்வாடி உட்பட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்தது. இதனால், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

## பரம்பிக்குளம் அணையின் நீர்மட்டம் 8 அடியாக குறைந்தது



ஆனைமலை,

பரம்பிக்குளம் அணையின் நீர்மட்டம் 8 அடியாக குறைந்துள்ளது.

72 அடி உயரம்

பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தின் பிரதான அணையாக இருப்பது பரம்பிக்குளம். 72 அடி உயரம் கொள்ளளவு கொண்ட இந்த அணை கேரளாவில் அமைந்து இருந்தாலும், தமிழக பொதுப்பணித்துறை அதிகாரிகள் கட்டுப்பாட்டில் உள்ளது.

இந்த அணைக்கு வால்பாறை சோலையார் அணையில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீர் முக்கிய நீர் ஆதாரமாக உள்ளது. மேலும் பரம்பிக்குளம் வனப்பகுதியில் மழை பெய்தாலும், இந்த அணைக்கு தண்ணீர் வரத்து இருக்கும். பரம்பிக்குளம் அணையில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீர் சர்க்கார்பதிக்கு கொண்டு வரப்பட்டு, அங்கு மின் உற்பத்திக்கு பிறகு காண்டூர் கால்வாய் வழியாக திருமூர்த்தி அணைக்கு செல்கிறது. இங்கிருந்து பாசனத்துக்காக கால்வாய்களில் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

குறைய தொடங்கியது

கடந்த சில மாதங்களுக்கு முன்பு பரம்பிக்குளம் அணையின் நீர்மட்டம் 50 அடிக்கு மேல் இருந்தது. இந்த நிலையில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்க வேண்டிய நிலை இருந்ததால், அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதைத்தொடர்ந்து அணையின் நீர்மட்டம் படிப்படியாக குறைய தொடங்கியது.மேலும் சோலையார் அணையில் இருந்து தண்ணீர் திறப்பது நிறுத்தப்பட்டது. இதன் காரணமாகவும், பரம்பிக்குளம் பகுதியில் மழை இல்லாததாலும் அணைக்கு வரும் தண்ணீரின் அளவு குறைந்தது. இதனால் நீர்மட்டம் 8 அடியாக குறைந்தது. நேற்று காலை நிலவரப்படி பரம்பிக்குளம் அணையின் நீர்மட்டம் 8.61 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 11 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 63 கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

உயர வாய்ப்பு

இது தொடர்பாக பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறியதாவது:-

பரம்பிக்குளம் அணையில் இருந்து திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டதால் அணையின் நீர்மட்டம் குறைந்து உள்ளது. மேலும் சோலையார் அணையில் இருந்து வந்து கொண்டிருந்த தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளது. சோலையார் அணையின் நீர்மட்டம் கடந்த சில

நாட்களுக்கு முன்பு 2 அடியாக இருந்தது. இதனால் அந்த அணையில் இருந்து தண்ணீர் திறப்பது நிறுத்தப்பட்டது. தற்போது சோலையார் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

இந்த அணையின் நீர்மட்டம் மேலும் உயரும் பட்சத்தில், பரம்பிக்குளம் அணைக்கு தண்ணீர் திறக்கப்படும். அதே நேரத்தில் பரம்பிக்குளம் பகுதியில் மழை பெய்தாலும், அணையின் நீர்மட்டம் உயர வாய்ப்பு உள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## கிணத்துக்கடவு பகுதியில் நிலக்கடலை சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம்



கிணத்துக்கடவு,
கிணத்துக்கடவு பகுதியில் நிலக்கடலை சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.
<u>விவசாயம்</u>

கிணத்துக்கடவு மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் விவசாயம் முக்கிய தொழிலாக உள்ளது. இங்கு தக்காளி சாகுபடியில் அதிகளவு விவசாயிகள் ஈடுபட்டு வருகிறார்கள். மேலும் நிலக்கடலை உள்பட பயறு வகை பயிர்களும் சாகுபடி செய்யப்படுகிறது.

தற்போது கிணத்துக்கடவு பகுதியில் தக்காளி சீசன் முடிவடையும் நிலையில் உள்ளது. இதனால் விவசாயிகள் மானாவாரி சாகுபடியில் ஈடுபட தயாராகி வருகிறார்கள். அதே நேரத்தில் தென்மேற்கு பருவமழை விரைவில் தொடங்க உள்ளதால், விவசாயிகள் தங்களது தயார்படுத்தி வருகிறார்கள்.

<u>நிலக்கடலை</u>

கடந்த சில நாட்களுக்கு முன்பு கிணத்துக்கடவு, சூலக்கல், சொக்கனூர் உள்பட பல்வேறு இடங்களில் மானாவாரி பயிரான நிலக்கடலை விதைகளை விவசாயிகள் விதைத்தனர். அதன் பின்னர் கோடை மழை பெய்ததால், தற்போது நிலக்கடலை செடிகள் நன்கு வளர்ந்துள்ளன. மேலும் விவசாயிகள் தட்டைப்பயறு, பாசிப்பயறு, உளுந்து போன்றவற்றையும் பயிரிட்டுள்ளனர். பெரும்பாலான விவசாயிகள் நிலக்கடலை சாகுபடி செய்ய ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

இது குறித்து விவசாயிகள் கூறியதாவது:–

கோடை மழை பெய்ததால் நிலக்கடலை உள்பட பயறு வகை பயிர்களை சாகுபடி செய்துள்ளோம். தென்மேற்கு பருவமழை விரைவில் தொடங்க உள்ளதால், விவசாயத்துக்கு பயன் உள்ளதாக இருக்கும் என்று எதிர்பார்த்துள்ளோம். தக்காளி சீசன் நிறைவடைய உள்ளதால் இன்னும் விலை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

<u>400 ஏக்கர்</u>

இது தொடர்பாக வேளாண்மைத்துறை அதிகாரிகள் கூறியதாவது:–

கிணத்துக்கடவு பகுதியில் 400 ஏக்கர் பரப்பளவில் நிலக்கடலை சாகுபடி செய்யப்படுகிறது. இதையொட்டி விதைகள் தயார் நிலையில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. தென்மேற்கு பருவமழை அதிக வாய்ப்பு உள்ளதால் விவசாயிகள் பயறு வகை பயிர் சாகுபடியிலும் ஈடுபட்டுள்ளனர். இதற்காக தட்டை பயறு, தினை, குதிரைவாலி போன்றவற்றின்

விதைகளும் தயார் நிலையில் உள்ளனர். இவற்றை விவசாயிகள் மானிய விலைக்கு பெற்று பயன்பெறலாம். மேலும் விவரங்களுக்கு வேளாண்மைத்துறை அலுவலகத்தை அணுகலாம்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.